1993 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்டிருப்பது சீர் மரபினருக்கு மட்டுமல்ல, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தவர்களுக்கு, அத்தனை பேருக்கும கேட்கப்பட்டிருக்கிறது. 107 சமுதாய இன மக்கள் இதில் அடங்கியிருக்கிறார்கள்.

மேலும் வீட்டுவசதித் துறையைப் பொறுத்தமட்டில் இந்த வீடுகள் ஒதுக்கப்படுகின்ற முறை என்பது மக்களின் வருமான வரம்பின்படிதான் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப் படையில் தான் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருமானப் பிரிவினர், மத்திய வருமானப் பிரிவினர், உயர்ந்த வருமானப் பிரிவினர் என்று 4 வகை களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அந்த வருமான விகித அடிப்படையில் தான் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பினருக்கு 18 சதவீதமும், மாநில அரசு ஊழியர் களுக்கு 18⅓ சதவீதமும், மத்திய அரசு ஊழியர்களுக்கு 11 சதவீதமும், பாதுகாப்புப் படையில் பணியாற்றுகின்ற முன்னாள் பாதுகாப்புப் படையினர் ஆகியோருக்கு 7.5 சதவீதமும், சலவையாளர் மற்றும் முடிதிருத்துவோர் ஆகியோருக்கு 5 சதவீதமும், பத்திரிகையாளர் பிரிவினருக்கு 3 சதவீதமும், பொதுமக்கள் பிரிவினருக்கு 37 சதவீதமும், ஆக மொத்தமாக ஒதுக்கப்படுகிறது. அந்த அடிப்படையிலே இந்த 20 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு மட்டும் ஒதுக்கவேண்டுமென்று சொன்னால் அது இயலாத காரியமாக இருக்கிறது. இப்போது இந்தக் கோரிக்கையை ஏற்போம் என்று சொன்னால் மற்ற இனங் களிலிருந்து இதே மாதிரி கோரிக்கைகள் எழும் என்ற காரணத்தால் தற்போது இதைப் பரிசீலிக்க முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 360. திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

360—

கணபதிபுரம் ஊராட்சி ஆதிதிராவிடர் குடியிருப்பில் திருமண மண்டபம் கட்டும் திட்டம்

*16737—திரு. சி. சுவாமிநாதன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், கணபதிபுரம் ஊராட்சி ஆதி திராவிடர் குடியிருப்பில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் புதுக்கோட்டை ஒன்றியம், கணபதிபுரம் பகுதிக்கு மக்கள் குறையைக் கேட்கச் செல்கிறபோது அந்தப் பகுதியில் அடர்த்தியாக ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பல பகுதிகளில், பல கிராமங்களில் எங்களுக்கு என்று தனியாக திருமண மண்டபம் கட்டித் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்ததோடு அவர்கள் ஒரு குறையையும் என்னிடத்தில் சொன்னார்கள். நாங்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். குறைந்த வருமானத்தை உடையவர்களாக இருக்கின்ற காரணத்தால் ஆலயங்களுக்குத் திருமணம் செய்வதற்காக செல்கிறபோது அங்கே இட நெருக்கடி காரணமாக ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான திருமணங்கள் ஆலயங்களில் நடைபெறுகிறபோது எங்களுக்குப் பல சந்தர்ப்பங்களில் மரத்தடியில் வைத்து திருமணம் நடத்துகின்ற அவலநிலை தான் ஏற்படுகிறது. எனவே, 10, 15 ஆதி திராவிடர் மக்கள் வாழ்கின்ற கிராமங்களுக்கு மத்தியில் ஒரு மையப் பகுதியில் ஒரு திருமணம் மண்டபம் கட்டிக் கொடுத்தால் அது எங்களுக்கு மிகவும் வாய்ப்பாக அமையும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இதை அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. புதுக்கோட்டை ஒன்றியம், கணபதிபுரம் ஊராட்சி ஆதி திராவிடர் குடியிருப்பில் சமுதாயக் கூடம் கேட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இதுபோன்ற கோரிக்கைகள் அரசுக்கு நிறைய வந்து கொண்டிருக்கின்றன. ஒன்றியத்திற்கு ஒன்று அல்லது இரண்டு என்று பார்த்தால் கூட நிறைய நிதி தேவைப்படுகிறது. ஆகவே, நிதி நிலைமைக்கு ஏற்ப அந்தக் கோரிக்கைகளின் முக்கியத்துவத்தைக் கருதி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் காந்திஜி அவர்கள் இந்த ஆதி திராவிடர் மக்களைப்பற்றி குறிப்பிடுகிறபோது அவர்களைக் கடவுளின் குழந்தைகள் என்று வர்ணித்து அவர்களுடைய கல்லறையில் கூட அரிசன் சேவா என்று உண்டியலை வைத்து அவர்களுடைய இறுதி மூச்சில், எண்ணத்தில் கூட இந்தியாவில் வாழ்கிற அத்தனை ஆதி திராவிடர் மக்களும் நல்லமுறையில் வாழவேண்டும் என்ற எண்ணத்தின் உணர்வோடு அவர்கள் வாழ்ந்து மடிந்து இருக்கிறார்கள்.

1993 ஏப்ரல் 15]

அதேபோல் இன்றைக்கு டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய நினைவாக நாம் மண்டபம் எழுப்பி, அவர்களுடைய நினைவாக நினைவுச் சின்னங்களை எழுப்புகிறபோது அவர்களுடைய நினைவாக தமிழகத்திலே ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று அல்லது இரண்டு இடங்களிலாவது ஆதி திராவிடர் மக்களுக்கென்று தனியாக திருமண மண்டபம் அமைத்துத்தர அரசு முன்வருமா என்றும்; அல்லது அவர்களை தொடர்ந்து நாம் மரத்தடியில் வைத்து திருமணம் நடத்துவதற்கு அனுமதிக்கப் போகிறோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் ஆதி திராவிட மக்களுடைய உணர்வுகளை அறிந்து சென்னையிலே ஒரு மாபெரும் மணிமண்டபம் உருவாக்கி அதன் மூலம் இந்த மக்கள் இன்றைக்கு நவீனகால அளவில் திருமணத்தை நடத்த வேண்டும் என்று சென்னையிலே உருவாக்கியிருக்கிறார்கள். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாவட்டத் தலைநகரங்களிலும் இதுபோன்று கூடங்கள் அமைத்து அந்தந்த மாவட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்யலாம் என்றுகூட எங்களுக்கு அறிவுரை சொல்லியிருக்கிறார்கள். ஒன்றியங்கள் வாரியாக இதுபோன்று பரிசீலிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பதினான்காம் பட்டியல்)

1—

போளூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கணிப்பொறி அறிவியல் ஆய்வகம் ஏற்படுத்துதல்

வினா எண். 6201—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நல்ல கணிப்பொறி அறிவியல் ஆய்வகம் (Computer Science) ஏற்படுத்த அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?